




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 3 | 4 Pages | 3.8.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| லர்: 03 | இதழ்: 3 | 4 பக்கங்கள் | 3.8.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**

**மாசறு காட்சி யவர்க்கு**

**விளக்கம்:**

**மயக்கம் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வை உடையவர்க்கு, அம் மெய்யுணர்வுஅறியாமையைநீக்கிஇன்ப நிலையைக்கொடுக்கும்.**

## மாநிலங்களவையின் மையப்பகுதிக்கு பாதுகாப்பு படையினர் வருவதா? மல்லிகார்ஜூன கார்கே கண்டனம்



புதுடெல்லி, ஆக. 3

அகில இந்திய காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவருமான மல்லிகார்ஜூன கார்கே, மாநிலங்களவை துணைத்தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மாநிலங்களவையில் உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயக உரிமையான போராட்டத்தைப் பயன்படுத்தும்போது, மத்திய தொழிலக பாதுகாப்பு படையினர் சபையின் மையப்பகுதிக்கு வரும் விதம் எங்களுக்கு ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கிறது. நமது நாடாளுமன்றம் இவ்வளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதா? இதை நாங்கள் கண்டிக்கிறோம்.

இவ்வாறு கூறியுள்ளார்.

## 285 நாட்கள் சிறைவாசத்திற்குப் பிறகு போக்சோ வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட முதியவர்: நடந்தது என்ன..?

திருவனந்தபுரம், ஆக. 3

கேரள மாநிலம் ஆலப்புழையில் கணவனால் கைவிடப்பட்ட பெண், தனது 15 வயது மகளுடன் வசித்து வந்தார். மகள் படித்து வந்த பள்ளியில், காவலாளியாகபணிசெய்துவந்த75வயதானமுதியவர்,இந்தகுடும்பத்தினருக்கு ஆதரவாக இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் ஒரு நாள் பள்ளிக்கு சென்ற அந்த மாணவி மிகவும் சோகமாக இருந்துள்ளார். இதை தொடர்ந்து சக மாணவிகள், அந்த மாணவியிடம் விளக்கம் கேட்டுள்ளனர். அப்போது அந்த மாணவி, பள்ளியில் காவலாளியாக பணியாற்றும் முதியவர் என்னை பாலியல் பலாத்காரம் செய்து விட்டார் என்றும், அதனால் நான் கர்ப்பமாக இருக்கிறேன் என்று கூறி கதறி அழுதார். இது பள்ளி நிர்வாகத்தின் கவனத்துக்கும் சென்றது.

பின்னர் இதுகுறித்து ஆலப்புழை வடக்கு போலீசில் பள்ளி சார்பில் புகார் அளிக்கப்பட்டது. அந்த புகாரின் பேரில், 75 வயது முதியவரை போலீசார், போக்சோபிரிவின்கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதுதொடர்பான விசாரணை செங்கன்னூர் கோர்ட்டில் நடந்தது. பின்னர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை தொடங்கியது.

அப்போது மாணவியிடம், நீதிபதி நடத்திய ரகசிய விசாரணையில், எனது கர்ப்பத்திற்குகாரணமானஆண்நண்பரைகாப்பாற்றுவதற்காக,காவலாளியான முதியவர் என்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக பொய் புகார் கூறினேன் என்று மாணவி கூறினார்.

இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த நீதிபதி, முதியவரை உடனடியாக விடுவிக்க உத்தரவிட்டார். மேலும் பொய் வழக்கு போட்டு முதியவரை சிறையில் அடைத்த போலீசாரையும் கண்டித்தார். இதனை தொடர்ந்து சிறுமியின் கர்ப்பத்திற்கு காரணமான வாலிபரை கைது செய்ய உத்தரவிட்டார். அதன்படி செங்கன்னூரை சேர்ந்த அந்த வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

## விண்வெளியில் இருந்து பிரதமரிடம் பேசியது மகத்தான தருணம் சுபான்ஷு சுக்லா



புதுடெல்லி, ஆக. 3

சர்வதேசவிண்வெளிபயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா நேற்று காணொலி மூலம் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர், 'விண்வெளி பயணத்தில் எனக்கு மகத்துவமான தருணமாக அமைந்தது, இந்திய பிரதமரிடம் விண்வெளியில் இருந்து தேசியக் கொடியின் பின்னணியில் நின்று கொண்டு பேசியதுதான். அந்த தருணம் இந்தியா ஒரு பார்வையாளராக அல்ல, சம பங்கேற்பாளராக உரையாடலில் மீண்டும் நுழைவதைக் குறிக்கிறது' எனக்கூறினார்.

மேலும் அவர், '41 அண்டுகளுக்குப்பிறகு ஒரு இந்தியர் விண்வெளிக்கு திரும்பி இருக்கிறார். இந்த முறை ஒரு தனிமையான பாய்ச்சல் அல்ல, இந்தியாவின் இரண்டாவது சுற்றுப்பாதையின் தொடக்கமாகும். இந்த முறை, நாங்கள் பறக்க மட்டுமல்ல, வழிநடத்தவும் தயாராக இருக்கிறோம். நாடு முழுவதிலுமிருந்து கிடைத்த அன்பும் ஆதரவும் என்னை மிகவும் கவர்ந்தது' என்றும் சுக்லா கூறினார்.

## திடீரென வீட்டுக்குள் நுழைந்த புலி.. புத்திசாலித்தனமாக பிடித்துக் கொடுத்த தந்தைமகள் விருது அறிவித்த அரசு



ராஞ்சி, ஆக. 3

ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சி அருகே முரிபோலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்டது மர்து கிராமம். இந்த ஊரை சோந்த புரந்தர் மஹ்டோ என்பவரது வீட்டுக்குள் கடந்த ஜூன் மாதம் 25ந்தேதி அதிகாலை 4.30 மணி அளவில் ஒரு ஆண் புலி புகுந்துவிட்டது. அப்போது மஹ்டோ, அவரது மகள் சோனிகா குமாரி மற்றும் உறவுக்கார சிறுமி ஒருவர் ஆகியோர் வீட்டில் இருந்தனர். அதிர்ஷ்டவசமாக புலி அவர்கள் தூங்கிய அறைக்குள் நுழையாமல் வேறுபக்கமாக சென்றதால், மஹ்டோ சிறுமிகளை பத்திரமாக வெளியே அழைத்து வந்தார். பின்னர் புலியை வீட்டுக்குள் வைத்து பூட்டிவிட்டார். அதன்பிறகு வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மீட்பு படையினர் வந்து 12 மணி நேரம் போராடி புலியை பிடித்துசென்றனர்.புலியைக்கண்டதும்மிரண்டுவிடாமல்புத்திசாலித்தனமாக புலியை மடக்கிய தந்தைமகளுக்கு வீரதீர விருது வழங்க மாநில அரசு முடிவு செய்தது. நேற்று மாநிலத்தின் 76வது ஆண்டு வனவிழா கொண்டாடப்பட்டதையொட்டி அவர்களுக்கு வீர தீர விருதும் வழங்கப்பட்டது. இதில் ரூ.1.20 லட்சம் மதிப்புள்ள காசோலை மாநில அரசு சார்பில் வழங்கப்பட்டது. மேலும் வனத்துறைக்கு அவர்கள் ஆற்றிய சேவைக்காக வனத்துறை சார்பில் தனியாக ரூ.21 ஆயிரம் மதிப்புள்ள மற்றொரு காசோலையும் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

# மு.க.ஸ்டாலினை 2 முறை ஓ.பன்னீர்செல்வம் சந்தித்தது ஏன்?; பிரேமலதாவும் சென்று பார்க்க காரணம் இதுதான்!

சென்னை ஆக. 3

"அரசியலில் யாரும் நிரந்தர நண்பனும்இல்லை,எதிரியும்இல்லை" என்று சொல்வார்கள். காரணம்.. கட்சியை தொடங்கும்போது கொள்கை, கோட்பாடு என்று தனியாக வகுத்து செயல்படும் கட்சிகள் கூட, தேர்தல் நெருங்கும் சமயத்தில் அதையெல்லாம் மூட்டை கட்டிவைத்துவிட்டு, "கொள்கை வேறு, கூட்டணி வேறு" என்று சொல்லிக்கொண்டு, அதிகம் 'சீட்' தரும் கட்சிகளுடன் கைகோர்த்து விடுவார்கள். அதற்கு கடந்த கால தமிழக அரசியல் வரலாற்றில் தேர்தல் கால முந்தைய நிகழ்வுகளே சாட்சி.

அந்த வகையில், தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்களே உள்ளன. ஆளும் கட்சியான தி.மு.க.வும், ஆண்ட கட்சியான அ.தி.மு.க.வும் ஒரு பக்கம் கூட்டணியை வலுப்படுத்தவும், மற்றொரு பக்கம் மக்கள் சந்திப்பு பயணத்தையும் தொடங்கிவிட்டன.

தி.மு.க. கூட்டணியை பொறுத்தவரை கடந்த 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலின் போது அங்கம் வகித்த கட்சிகள் அப்படியே கூட்டணியில் தொடர்கின்றன. கூடுதலாக, நடிகர் கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யம் இணைந்திருக்கிறது. இதை வைத்து பார்க்கும்போது, தி.மு.க. கூட்டணி பலமாகவே உள்ளது.

ஆனால், அ.தி.மு.க.வை பொறுத்த வரை, கூட்டணியும் வலுப்பெறாத நிலையில், உட்கட்சிக்குள்ளேயே பல்வேறு பிளவுகள் ஏற்பட்டுவிட்டன. கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர் செல்வமும் அ.தி.மு.க. தொண்டர் மீட்புக்குழுவை தொடங்கி, "தி.மு.க. ஆட்சியை வீழ்த்த அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும்" என்று வலியுறுத்திவந்தார். ஆனால், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியோ அதற்கு செவி சாய்க்கவில்லை.

கட்சிக்கு உள்ளேயும் முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அதிருப்தியில் இருந்து வருகிறார். மேலும் சில முன்னாள் அமைச்சர்களும் அதிருப்தியில் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

இதுபோன்ற நிலையில்தான் 2026 சட்டமன்ற தேர்தலை சந்திக்க அ.தி.மு.க. பா.ஜ.க. இடையே கூட்டணி உருவாகியுள்ளது. ஆனால், அ.தி.மு.க.வோ, 'எங்கள் தலைமையில் தனித்து ஆட்சி' என்று கூறிவருகிறது. பா.ஜ.க.வோ, 'கூட்டணி ஆட்சி' என்றுசொல்கிறது. இதில்இருந்தே இரு கட்சிகளுக்கும் இடையே இன்னும் ஒத்த கருத்து ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது.

இந்த நிலையில்தான், முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பா.ஜ.க. தலைமையின் உதவியை நாடினார். சமீபத்தில் தமிழகம் வந்த பிரதமர் நரேந்திரமோடியையும் சந்திக்க நேரம் கேட்டிருந்தார்.

ஆனால், அவருக்கு நேரம் ஒதுக்காமல், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு நேரம் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு, ஓ.பன்னீர் செல்வம் தரப்பை எரிச்சல் அடையச் செய்தது. அதிருப்தியின் உச்சத்துக்கே ஓ.பன்னீர்செல்வம் சென்றார்.

இந்த நிலையில்தான், நேற்று காலை நடைப்பயிற்சியின்போது முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசினார். இந்த சம்பவம் அ.தி.மு.க. தரப்பையும் தாண்டி தமிழக அரசியல் வட்டாரத்தை திரும்பி பார்க்க வைத்தது.

ஆனால், ஓ.பன்னீர்செல்வம் தரப்பில், முதல்அமைச்சரின் உடல்நலம் குறித்தும், அவரது



சகோதரர் மு.க.முத்து மறைவு குறித்தும் கேட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு மத்தியில், தனது ஆதரவாளர்களுடன் ஓ.பன்னீர்செல்வம் ஆலோசனையும் நடத்தினார்.

அப்போது, 'நம்மை மதிக்காத பா.ஜ.க. கூட்டணியில் இனியும் இருக்கக்கூடாது' என்று நிர்வாகிகள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் அறிவித்தார்.

மேலும் அவரிடம் நிருபர்கள், "தி.மு.க. அரசை வீழ்த்த வேண்டும் என்பதில் உடன்பாடு உண்டா?" என்று கேட்டனர். அதற்கு அவர், "யாரை வீழ்த்த வேண்டும் என்பது எங்கள் குறிக்கோள் அல்ல. யாரை வாழ்த்த வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள்" என்று புரியாத புதிரான பதில் ஒன்றை அளித்தார்.

தி.மு.க. மீது அவர் கரிசனம் காட்டியது, நேற்று மாலையே வெளிச்சத்துக்கு வந்தது. ஒரேநாளில் 2வது முறையாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை வீட்டிற்கே சென்று ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசினார்.

பிறகு பேட்டியளித்த அவர், "அரசியலில் நண்பர்களும் இல்லை. எதிரிகளும் இல்லை என்பதுதான் கடந்த கால வரலாறு. எதிர்காலத்தில், தேர்தல் நெருங்கும்போது எதுவும் நடக்கலாம்" என்று பொடி வைத்தே பேசினார்.

இதனால், ஓ.பன்னீர்செல்வம் தி.மு.க.வில் இணைந்து விடுவாரோ? என்றெல்லாம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது.

இதுகுறித்து அவரது ஆதரவாளர் ஒருவரிடம் கேட்டபோது, "தி.மு.க.வில் எல்லாம் ஓ.பன்னீர்செல்வம் இணையமாட்டார். தேர்தல் நெருங்கும்போது அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுத்து அறிவிப்பார்" என்றார்.

2 முறை ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசியதற்கு இடையே, தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்தும் கட்சி நிர்வாகிகளோடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினார்.

சந்திப்பு குறித்து பேட்டியளித்த அவர், உடல் நலம் குறித்து விசாரிக்கவே வந்தோம் என்று தெரிவித்தாலும், அப்போது பல்வேறு விஷயங்கள் பேசப்பட்டதாக கூறப்படுகிறது. ஏற்கனவே, அ.தி.மு.க. கூட்டணியில்இருந்துவந்த தே.மு.தி.க.வுக்கு மாநிலங்களவை 'சீட்' ஒதுக்கப்படவில்லை. தனது மகனை எம்.பி.யாக்கிவிடலாம் என்று எதிர்பார்த்திருந்த பிரேமலதா விஜயகாந்துக்கு இது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

எனவே, தன்னுடைய எதிர்ப்பை தெரிவிக்கவும், தங்களுக்கு வேறு வாய்ப்பு இருக்கிறது என்பதை காட்டவும் அவர், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினைசென்று சந்தித்து இருக்கிறார் என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

மேலும் இந்த சந்திப்பின்போது, "சாலிகிராமத்தில் விஜயகாந்த் இல்லம் இருக்கும் தெருவுக்கு அவரது பெயரை சூட்ட வேண்டும். அவருக்கு மணி மண்டபம் கட்ட அரசு அனுமதியளிக்க வேண்டும்" என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டதாக தெரிகிறது.

# பொறியாளர் கவுன்சில் அமைக்க திருத்துறைப்பூண்டி எம்.எல். ஏ விடம் கோரிக்கை மனு

அகில இந்திய கட்டுநர் சங்கம் திருத்துறைப்பூண்டி மைய கூட்டம் ஜூலை 29 ஆம் தேதி மாலை அங்கை மஹாலில் நடைபெற்றது. சங்க தலைவர் ராஜமன்னார் அனைவரையும் வரவேற்றார். பொருளாளர் சபியுதின் கட்டுநர் பிரார்த்தனை வாசித்தார். பொறியாளர் கவுன்சில் குறித்து தஞ்சை பொறியாளர் ஜான் கென்னடி விளக்கவுரை ஆற்றினார். திருத்துறைப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினர் மாண்புமிகு க. மாரிமுத்து அவர்களிடம் பொறியாளர் கவுன்சில் அமைக்க அகில இந்திய கட்டுநர் சங்கம் திருத்துறைப்பூண்டி மையம் மூலம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டு, சட்டமன்றத்தில் சட்டம் இயற்ற அது தொடர்பாக சட்டமன்றத்தில் உரையாற்றிட கோரிக்கை வைக்கப்பட்டது. மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், ஆர்க்கிடெக்டுகள் ஆகியோருக்கு கவுன்சில் இருப்பது போல் சிவில் பொறியியல்துறையில் பட்டயம் மற்றும் பட்டம் பெற்றவர்களுக்கு என தனி ஒரு கவுன்சில் தமிழக அரசு ஏற்படுத்தி தரவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. குஜராத் மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களின் பொறியாளர் கவுன்சில் நடைமுறையில் உள்ளது. கோரிக்கையை பெற்றுக் கொண்டு சிறப்புரை ஆற்றிய திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் தமிழகத்தில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக மாபெரும் தொழில் என்பது கட்டுமானத்துறை என குறிப்பிட்டார் .அகில இந்திய கட்டுநர் சங்க திருவாரூர் மைய




தலைவர் பொறியாளர் வெங்கடேசன், செயலாளர் பொறியாளர் பாலன், மு.தலைவர் ஜி.செல்லத்துரை, முன்னாள் தலைவர் பொறியாளர்பி.கே.எம்.செந்தில், பொறியாளர் சேபாஷ் ரோலி, பொறியாளர் கபிர்தாஸ் ஆகியோர் திருவாரூர் மையம் சார்பாகவும் மற்றும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டிட பொறியாளர் சங்க கூட்டமைப்பு மாநில இணை செயலர் மன்னார்குடி பொறியாளர் கலியமூர்த்தி ஆகியோர் கலந்துக் கொண்டனர். நிகழ்ச்சியை அகில இந்திய கட்டுநர் சங்க சாசன தலைவர் பொறியாளர் செல்வகுமார், முன்னாள்தலைவர்பொறியாளர் முனைவர். துரை ராயப்பன் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். மேலும் அகில இந்திய கட்டுநர் சங்க முன்னாள் தலைவர்கள் கைலாசம், மாதவன், செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியம் ஆகியோரும் மற்றும் ஏனைய அகில இந்திய கட்டுநர் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களும், கட்டுமான பொறியாளர் சங்க திருத்துறைப்பூண்டி மைய பொறியாளர்கள், மையத் தலைவர் யோகநாதன், செயலாளர் முத்துக்குமார், பொருளாளர் சரவணகுமார், சாசனத் தலைவர் பாலசுப்பிரமணியன், முன்னாள் மண்டல செயலர் மற்றும் மு.மையத் தலைவர் சுப்பிரமணியன், முன்னாள் மண்டல தலைவர் K K V செல்வன் (எ) சோமசுந்தரம், முன்னாள் தலைவர் ராமச்சந்திரன், உடனடி மு.தலைவர் ரகுவரன், து.தலைவர் ஹாலித், உறுப்பினர் கண்ணன், கஜபதி ராஜா, கோகுல வசந்த், ஆர்.சக்தி வேல் ஆகியோரும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். தஞ்சை பொறியாளர்கள் அறிவழகன், பொறியாளர் பகலவன் மற்றும் பொறியாளர் சார்லஸ் கலந்து கொண்டனர். நிறைவாக திருத்துறைப்பூண்டி கட்டுநர் சங்க செயலாளர் திருமாறன் அனைவருக்கும் நன்றி கூறினார்.




# அரசு முதியோர் இல்லம்: மதுரை ஐகோர்ட்டு உத்தரவை நிறுத்தி வைத்தது சுப்ரீம் கோர்ட்டு

புதுடெல்லி, ஆக. 2

கடந்த 2024-25 நிதியாண்டில் முதியோர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும், அனைத்து மாவட்டங்களிலும் அரசு முதியோர் இல்லங்கள் இல்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இதன் அடிப்படையில், அனைத்து மாவட்டங்களிலும் முதியோர் இல்லங்களை அமைக்க வேண்டும் என ஐகோர்ட்டு மதுரைக்கிளை உத்தரவிட்டிருந்தது.

முன்னதாக தூத்துக்குடியை சேர்ந்த அதிசயகுமார், மதுரை ஐகோர்ட்டு கிளையில் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். அதில், தமிழகத்தில் திருச்செந்தூர், ராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரி, வேளாங்கண்ணி பகுதியில் உள்ள கோவில் வளாகங்கள் பேருந்து நிலையங்களில் ஆதரவற்ற முதியவர்கள் பலர் ஆங்காங்கே நடைமேடை உள்ளிட்ட பகுதிகளில் ஆதரவின்றி தங்கி உள்ளனர்.

இவர்களை பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நல பராமரிப்பு சட்டம் 2009ன்படி தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டம் தோறும் ஆதரவற்ற முதியோர் காப்பகம் அமைத்து பாதுகாக்க உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த சென்னைஐகோர்ட்டு மதுரை கிளை, சட்டப்படி மாவட்டத்தில் ஒரு முதியோர் இல்லமாவது அரசால் நடத்தப்பட வேண்டும். ஆனால் ஒரு இல்லம் கூட அரசால் நடத்தப்படவில்லை. தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இது விதிமீறும் செயல். ஏற்கத்தக்கதல்ல. ஆகவே அனைத்து மாவட்டங்களிலும் ஒரு முதியோர் இல்லத்தையாவது கட்டுங்கள் என உத்தரவிட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக தமிழ்நாடு அரசின் வக்கீல் ஜி.இந்திரா மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார். இந்த மேல்முறையீடு மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு, அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு முதியோர் இல்லத்தை கட்டமைக்கும் பணியை 6 மாதங்களுக்குள் தொடங்க தமிழக அரசுக்கு ஐகோர்ட்டு மதுரை கிளை பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைத்ததுடன், மூல மனுதாரர் அதிசயகுமார் பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை செப்டம்பர் 29ந் தேதிக்கு தள்ளி வைத்தது.

# சென்னை: பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த மதபோதகர் கைது



சென்னை ஆக. 3

சென்னை செங்குன்றத்தை அடுத்த பம்மதுகுளம் பெருமாள் கோவில் தெருவைச் சேர்ந்தவர் காமராஜ் என்ற டேவிட் (54 வயது). கிறிஸ்தவ மத போதகரான இவர், அதே பகுதியில் கிறிஸ்தவ திருச்சபை நடத்தி வருகிறார். இவருடைய மனைவி ஜெயா (50 வயது). இவர், அதே பகுதியில் உள்ள ஒரு அங்கன்வாடி மையத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார்.

ஜெயா, மாலை நேரத்தில் அப்பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவிகளுக்கு திருச்சபையில் வைத்து டியூஷன் சொல்லி கொடுத்து வருகிறார். இவரிடம் 10 வயது முதல் 13 வயது வரை உள்ள மாணவிகள் 10க்கும் மேற்பட்டோர் டியூஷன் படித்து வருகின்றனர். மனைவியிடம் டியூஷன் படிக்க வரும் பள்ளி மாணவிகளுக்கு டேவிட் பாலியல் தொல்லை கொடுத்து வந்ததாக கூறப்படுகிறது. அவரது பாலியல் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்ததால் பாதிக்கப்பட்ட பள்ளி மாணவிகள் இது பற்றி தங்களது பெற்றோரிடம் தெரிவித்தனர்.

அதைகேட்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள், செங்குன்றம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். இதையடுத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து மத போதகரான டேவிட்டை கைது செய்தனர்.

# உடுமலை பழங்குடியினத்தவர் படுகொலையை மறைக்க வனத்துறை முயல்கிறது எஸ்.டி.பி.ஐ. கண்டனம்



சென்னை, ஆக. 3

உடுமலையில் பழங்குடியினத்தவர் படுகொலையை மறைக்க முயலும் வனத்துறையின் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என எஸ்.டி.பி.ஐ. கட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

"திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே சின்னாறு கிராமம் பழங்குடியின சமூகத்தை சேர்ந்த மாரிமுத்து என்பவர், விசாரணை என்ற பெயரில் வனத்துறையினரால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு, கொடூரமாகத் தாக்கப்பட்டு, வனச்சரக அலுவலகத்தில் உயிரிழந்த சம்பவம் நெஞ்சை உலுக்குகிறது. இந்த காவல் மரணத்தை எஸ்.டி.பி.ஐ. கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

விவசாயம் நிலம் தொடர்பாக வனத்துறையினருடனான பிரச்சினையில், பொய்யாக புனையப்பட்ட வழக்கில் ஜூலை 29, 2025 அன்று உடுமலை நீதிமன்றத்தால் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்ட மாரிமுத்து, மறுநாள் ஜூலை 30 அன்று நீதிமன்ற நடைமுறைகளுக்காக உடுமலைக்கு வந்து திரும்பும்போது, சின்னாறு வனச்சோதனைச் சாவடியில் அரசுப் பேருந்திலிருந்து வனத்துறையினரால் வலுக்கட்டாயமாக இறக்கப்பட்டு, உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படாமல், வனச்சரக அலுவலகத்தில் சித்தரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்தார். அவரது உடலில் காணப்பட்ட பலத்த காயங்கள் இந்தக் கொடுமையை உறுதிப்படுத்துகின்றன.

விவசாய நிலம் தொடர்பான முரண்பாடுகளால், மாரிமுத்து மீது பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார். விடுதலைக்குப் பின்னரும் அவரை இலக்காக்கி, "சிறுத்தைப் பற்கள் கடத்தல், தற்கொலை" என வனத்துறை பரப்பும் பொய்க் கதைகள் நம்பகத்தன்மையற்றவை. இந்தப் படுகொலையை மறைக்க முயலும் வனத்துறையின் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்த படுகொலைக்கு காரணமான வனச்சரகர் உள்ளிட்ட வனத்துறையினர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, உடனடியாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும். மாரிமுத்துவின் குடும்பத்திற்கு ரூ.50 லட்சம் இழப்பீடு மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். இவ்வழக்கை நேர்மையான முறையில் விசாரிக்க, சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட வேண்டும். தமிழகத்தில் தொடரும் சட்டவிரோத காவல் மரணங்களைத் தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# போலீஸ் வேனில் வைத்தே தகாத வார்த்தையில் திட்டி போலீசாரை தாக்கிய கைதிகள் வீடியோ வைரல்



சென்னை, ஆக. 3

சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள விசாரணை கைதிகள் 26 பேரை ஒரு போலீஸ் பஸ்சில் ஏற்றி, எழும்பூர் கோர்ட்டுக்கு நேற்றுமுன்தினம்போலீசார்அழைத்து வந்தனர். கைதிகள் அழைத்து வரப்பட்ட போலீஸ் பஸ்சை, நவீன்குமார் என்ற போலீஸ்காரர் ஒருவர் ஓட்டி வந்தார். இவர்களுக்கு பாதுகாப்புக்காக செந்தில், பாபு, சங்கர் என்ற சப்இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் சுமார் 30 போலீசார், இன்னொரு போலீஸ் வாகனத்தில் பின்தொடர்ந்து வந்தனர்.

இந்த கைதிகள் எழும்பூரில் உள்ள பல்வேறு கோர்ட்டுகளில் நேற்று முன்தினம் விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்டனர். விசாரணை முடிந்து, இரவு 8 மணியளவில், கைதிகள் ஏற்றப்பட்ட பஸ் மீண்டும் புழல் சிறை நோக்கி புறப்பட்டு சென்றது. பாதுகாப்பு போலீசாரும் அவர்களை பின்தொடர்ந்து சென்றனர். கைதிகள் அனைவரும், போகும் வழியில் ஒரே ஆட்டம்பாட்டத்துடன் அமர்க்களமாக சென்றனர். கைதிகளை ஏற்றி வந்த பஸ், வியாசர்பாடி பகுதியில் செல்லும்போது, கைதிகள் திடீரென பஸ்சின் பக்கவாட்டில் அடித்தப்படி ரகளையில் ஈடுபட்டனர். உடனே பஸ்சை ஓட்டிச் சென்ற போலீஸ்காரர் சாலையோரமாக நிறுத்தினார்.

ரகளையில் ஈடுபட்ட கைதிகளை போலீசார் சமாதானப்படுத்தினர். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 ஆசாமிகள், கைதிகள் இருந்த பஸ்சுக்குள் கஞ்சா பொட்டலங்களை வீசினார்கள். இதை போலீசார் பார்த்துவிட்டனர். கஞ்சா பொட்டலங்களை கைப்பற்ற முயற்சித்தார்கள். கஞ்சா பொட்டலங்களை போலீசார் கைப்பற்றாமல் இருக்க கைதிகள், பெரிய கலவர நாடகத்தை நடத்தினார்கள்.

போலீசாருடன் கைதிகள் வாக்குவாதம் செய்து, ஆபாசமாக திட்டி மோதலில் ஈடுபட்டனர். போலீசார் மீது தாக்குதல் நடந்தது. கைதிகள் வந்த பஸ் கண்ணாடி உடைக்கப்பட்டது. பஸ்சில் இருந்த விளக்குகளும் நொறுக்கப்பட்டது. கஞ்சா பொட்டலங்களை மறைப்பதற்காக கைதிகள் நடத்திய இந்த கலவர நாடகத்தை பார்த்ததும் பொதுமக்கள் திரண்டனர். பின்னர், கைதிகளை போலீசார் சமாதானப்படுத்தி, அங்கிருந்து மீண்டும் பஸ்சில் அழைத்து சென்றுவிட்டனர்.

இரவு 10 மணியளவில் கைதிகள் மீண்டும் புழல் ஜெயிலில் அடைக்கப்பட்டனர். ஆனால், இந்த சம்பவம் குறித்து காவலுக்கு சென்ற போலீசார், உயர் அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கவில்லை. உரிய புகாரும் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று கைதிகள் போலீசாரிடம் மோதலில் ஈடுபட்ட காட்சி, வீடியோ காட்சியாக சமூகவலைதளங்களில் வைரலானது. கைதிகள் போலீசார் மீது தாக்குதல் நடத்துவதும், ஆபாசமாக திட்டுவதும் வீடியோ காட்சியில் பதிவாகி இருந்தன. இதை பார்த்த உயர்போலீஸ் அதிகாரிகள், கடும் அதிர்ச்சி அடைந்தனர். கைதிகளுடன் காவலுக்கு சென்ற போலீசாருடன், அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். தகராறில் ஈடுபட்ட கைதிகளின் பெயர் பட்டியலும் சேகரிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக கைதிகள் மீது வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து உரிய புகார் கொடுக்காத போலீசார் மீதும் நடவடிக்கை பாயும் என தெரிகிறது.

# காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்தது: ஒகேனக்கல்லில் பரிசல் இயக்க அனுமதி



தர்மபுரி ஆக. 3

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருவதுடன், அவர்கள் அருவிகளில் குளித்தும், பரிசலில் சவாரி செய்தும் மகிழ்வர். இந்நிலையில் கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கன மழை காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது.

இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஒகேனக்கல் அருவிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் மாவட்ட நிர்வாகம் கடந்த 27ந் தேதி முதல் தடை விதித்து இருந்தது. கடந்த 29ந் தேதி அதிகபட்சமாக வினாடிக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் கனஅடி நீர் கர்நாடக அணைகளில் இருந்து உபரியாக திறக்கப்பட்டது.

கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டது. நேற்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 32 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. தண்ணீர் வரத்து படிப்படியாக குறைந்து இன்று காலை 9 மணி நிலவரப்படி வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக குறைந்தது.

இதன் காரணமாக காவிரி ஆற்றில் பரிசல் இயக்க அனுமதி வழங்கப்பட்டது. 6 நாட்களுக்கு பிறகு சுற்றுலா பயணிகள் உற்சாகமாக படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். ஆனால் அருவிகளில் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருக்குறள் முற்றோதிய 122 மாணவர்களுக்கு ரூ.15,000 பரிசுத்தொகை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்குகிறார்



சென்னை, ஆக. 3

திருக்குறளில் உள்ள 1,330 குறட்பாக்களையும் ஒப்பித்த 122 மாணவர்களுக்கு பரிசுத்தொகையாக ரூ.15,000க்கான காசோலை, மற்றும் சான்றிதழை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்க உள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"மாணவச் செல்வங்களிடையே திருக்குறள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம், முத்தமிழறிஞர் கலைஞரால் குறள் பரிசுத் திட்டம் கடந்த 2000ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்த 70 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.10,000/ குறள் பரிசுத் தொகையும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தன.

முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினால் 2022ம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு குறள் ஒப்பித்தல் செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் குறள் பரிசுத்தொகை தலா ரூ.10,000/ வீதம் வழங்க ஆணையிடப்பட்டது. அவ்வகையில் 2022 ஆம் ஆண்டு 219 மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

மாணவர்களுக்குத் திருக்குறள் மீதான ஆர்வத்தை மேலும் கூட்டிடும் வகையில் திருக்குறளில் உள்ள 1,330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகையும் தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினால் 2022 2023ம் ஆண்டு முதல் ரூ.10,000ல் இருந்து ரூ.15,000/ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்தகையதிருக்குறளின் சிறப்புகள் ஏட்டளவில் நின்றுவிடாமல் மாணவர்கள் மட்டுமல்லாது பொதுமக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கேதுவாக திருக்குறளை மையமாகக் கொண்டு செல்வி வர்சா ராஜ்குமார் குழுவினரின் சங்கத்தமிழ் நாட்டிய நாடகம், தஞ்சை ஆடுதுறை பாஸ்கர் குழுவினரின் திருக்குறள் நாடகம், கலைமாமணி பாரதி திருமகன் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும், கலைநன்மணி கருங்குயில் கணேஷ் குழுவினரின் கிராமியக் கலைநிகழ்ச்சிகள் நடத்தப் பெறவுள்ளன.

ஈரடியால் உலகளந்து வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையின் வளத்தக்க சிந்தனைகளை வாழ்வியல் சூழலோடு இணைத்து வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஓர் அற்புதத் திருவிழாவாக இந்நிகழ்ச்சி 04.08.2025 (திங்கள்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு சென்னை, அடையாறு திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் அரங்கம் முத்தமிழ்ப் பேரவை மன்றத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திருக்குறள் முற்றோதல் மாணவர்களுக்கான இணையவழி விண்ணப்பப் பக்கத்தை திறந்து வைத்து விழாப்பேருரை ஆற்றவுள்ளார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன் முன்னிலையுரையும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவ்வை அருள் வரவேற்புரையும் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் கு.ப.சத்தியபிரியா நன்றியுரையும் ஆற்றவுள்ளனர்.

ஏழிசையும் பல்கலையும் கலந்து மணக்கும் இத்தமிழ்க் கலை விழாவில் பொற்குடத்திற்குப் பொட்டு வைத்தாற்போல தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரால், திருக்குறள் முற்றோதலில் வெற்றி பெற்ற சென்னை (2), திருவள்ளூர் (9), காஞ்சிபுரம் (1), வேலூர் (1), கிருஷ்ணகிரி (1), திருவண்ணாமலை (2), விழுப்புரம் (3), கடலூர் (9), அரியலூர் (2), சேலம் (5), நாமக்கல் (2), ஈரோடு (2), கரூர் (1), கோயம்புத்தூர் (2), திருப்பூர் (1), நீலகிரி (1), திருச்சிராப்பள்ளி (4), சிவகங்கை (8), தஞ்சாவூர் (6), திருவாரூர் (2), நாகப்பட்டினம் (8), இராமநாதபுரம் (4), மதுரை (1), திண்டுக்கல் (1), தேனி (3), விருதுநகர் (12), திருநெல்வேலி (2), தூத்துக்குடி (1), கன்னியாகுமரி (6), செங்கற்பட்டு (15), இராணிப்பேட்டை (1), தென்காசி (3), மயிலாடுதுறை (1), ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 122 பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகையாக ரூ.15,000/க்கான காசோலையும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. செம்மொழித் தமிழ் மீதும் உலகப் பொதுமுறையான திருக்குறள் மீதும் தீராப்பற்று கொண்ட மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும், அய்யன் திருவள்ளுவரின் பெருமையைப் பறைசாற்றும் வகையிலும் இந்நிகழ்ச்சிகள் அமையவுள்ளன."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்டாலினின் பெயரையும் புகழையும் எதனாலும் மறைக்க முடியாது: எடப்பாடி பழனிசாமிக்கு அருண் நேரு எம்.பி. பதிலடி




சென்னை, ஆக. 3

தமிழக அரசு முதல்அமைச்சரின் பெயரில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டம் குறித்த விளம்பரத்தில், முன்னாள் முதல்வர் கலைஞரின்புகைப்படம், திமுக சின்னம் ஆகியவை இடம் பெற்றுள்ளது. இதற்கு தடை விதிக்க வேண்டும் என்று அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அதிமுக தொடர்ந்த வழக்கில்,சுப்ரீம்கோர்ட்டு வழிகாட்டுதல் படி பதவியில் உள்ள முதலமைச்சரின் படங்களை பயன்படுத்தலாம். அதேநேரத்தில் கட்சியின் கொள்கை தலைவர்கள், முன்னாள் முதல்அமைச்சர் படங்களைபயன்படுத்தகூடாது என சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது. இந்த வழக்கு விசாரணையை ஆகஸ்ட் 13ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

இந்தநிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அருண் நேரு எம்.பி. எக்ஸ் தள பதிவில்,

அண்மையில் 'உங்களுடன் ஸ்டாலின்', 'நலன் காக்கும் ஸ்டாலின்' ஆகிய மக்கள் நலத்திட்டங்களுக்கு முதலமைச்சரின் பெயரைப் பயன்படுத்தக் கூடாது, முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் படத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி அவர்களின் அதிமுகவில் உள்ள முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

இது மக்கள் மத்தியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் ஸ்டாலின் அவர்களுக்குப் பெருகும் ஆதரவு அலையைக் கண்டு எடப்பாடி பழனிசாமிக்கு உள்ள அச்சத்தையே காட்டுகின்றது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், தலைவர் ஸ்டாலின் ஆகியோர் அரசியல் கட்சியின் தலைவர்கள் மட்டுமல்ல. தமிழ்நாடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்கள். அவர்களின் பெயர்களையும் படங்களையும் மக்கள் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதுஅரசியல்மரபையும் தலைமைப் பண்பையும் போற்றுதல் ஆகும்.

இதற்கு முந்தைய ஆட்சிக் காலம் தொடங்கி இப்போது வரையிலும் பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர்கலைஞர்– எம்ஜிஆர் – ஜெயலலிதா பெயர்களும் படங்களும் பல திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஆட்சிக் காலத்தில்கூட அம்மையார் ஜெயலலிதாவின் பெயரும், படமும் பல திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இப்போது தங்கள் அரசியல் சுயநலத்திற்காகத் தமிழ்நாட்டு அரசியல் மரபை மறுதலிக்கும் மறுக்கும் வகையில் திராவிட இயக்கத் தலைவர்களின் பெயர்களையும் படங்களையும் பயன்படுத்தக் கூடாது என்று அதிமுக கூறுவது வெட்கக் கேடானது.

சூரியனைப் போன்று ஒளி வீசும் நம் மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் பெயரையும் புகழையும் எதனாலும் மறைக்க முடியாது என்பதைப் திரு எடப்பாடி பழனிசாமி அவர்கள் உணர வேண்டும் என பதிவிட்டுள்ளார்.

# மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்டு வீணாக கடலில் கலக்கும் நீரை பாசனத்திற்கு திருப்பிவிட வேண்டும்: டி.டி.வி.தினகரன்

சென்னை, ஆக. 3

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக கடந்த ஜூன் மாதம் 12ந்தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால், தற்போது வரை கடைமடைப் பகுதிக்கு வரவில்லை என தஞ்சாவூர், திருவாரூர் மாவட்ட விவசாயிகள் தங்களின் வேதனையை பதிவு செய்துள்ளனர். மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது.

மேட்டூர் அணையை திறக்கும் முன்பு காவிரி டெல்டா பகுதிகளின் கிளை ஆறுகளையும், கால்வாய்களையும் தூர்வார விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். ஆனால், தூர்வாராததால் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, வீணாக கடலில் கலக்கும் உபரிநீரை ஆறு, குளங்களில் சேமித்து பாசனத்திற்கு திருப்பிவிடத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பட்டப்பகலில் வீடு புகுந்து, பெண்ணை தாக்கி கொள்ளை முயற்சி: திருப்பத்தூரில் பரபரப்பு



திருப்பத்தூர் ஆக. 3

திருப்பத்தூரைச் சேர்ந்தவர்பஷீர். இவரதுமனைவி ரேஷ்மா. இன்று மதியம் ரேஷ்மா வீட்டில் தனியாக இருந்துள்ளார். அப்போது திடீரென வீட்டுக்குள் புகுந்த மர்ம நபர்கள் ரேஷ்மாவை தாக்கிவிட்டு கொள்ளையடிக்க முயற்சி செய்துள்ளனர்.

ரேஷ்மா கூச்சலிட்ட நிலையில் பக்கத்திலிருந்த இரும்பு ராடை எடுத்து ரேஷ்மாவின் தலையில் பலமாக தாக்கியுள்ளனர். அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்த நிலையில் மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். ரேஷ்மா மீட்கப்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பலத்த காயமடைந்த ரேஷ்மா உயிருக்கு ஆபத்தான நிலையில் தற்போது சிகிச்சைப் பெற்று வருகிறார். சம்பவ இடத்தில் திருப்பத்தூர் போலீசார் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஆகஸ்டு 7ம் தேதி தென்காசி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை

சென்னை, ஆக.3

தென்காசி சங்கரன்கோவில் சங்கர நாராயணர் கோவில் ஆடித்தபசு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் கல்வி நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு வரும் ஆக. 7 ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படுகிறது.

இந்த விடுமுறை, அரசுப் பாதுகாப்புக்கான அவசர அலுவல்களைக் கவனிக்கும் தென்காசி மாவட்டத்திலுள்ள மாவட்ட கருவூலம், சார்நிலை கருவூலங்கள் மட்டும் குறிப்பிட்ட பணியாளர்களுடன் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் விடுமுறைக்குப் பதிலாக, தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு ஆகஸ்ட் 23 ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது.

## சென்னை திருவேற்காட்டில் ரியல் எஸ்டேட் தொழிலதிபர் வெட்டிக்கொலை: மர்ம நபர்கள் வெறிச்செயல்

சென்னை, ஆக. 3

சென்னை திருவேற்காடு பகுதியை சேர்ந்தவர் ரியல் எஸ்டேட் தொழிலதிபர் சிவக்குமார். இன்று மாலை தனது குழந்தைகளை பள்ளியில் இருந்து அழைத்து வருவதற்காக சிவக்குமார் சென்று கொண்டிருந்தார். அப்போது வழியில் மர்ம நபர்கள் சிலர் சிவக்குமாரை பின்தொடர்ந்து சென்று, அவரை சரமாரியாக வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.



இதில் படுகாயமடைந்த சிவக்குமார், சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், சிவக்குமாரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். கொலை செய்யப்பட்ட சிவக்குமார் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்த நிலையில், பணம் கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த கொலை நிகழ்ந்ததா? என்ற கோணத்தில் போலீசார்தீவிரவிசாரணைநடத்தி வருகின்றனர்.

## ரஷியாவில் படித்து வரும் மருத்துவ மாணவர்களுக்கு பணம் அனுப்புவதாக ரூ.5.90 கோடி மோசடி: டாக்டர் கைது

திருச்சி, ஆக. 2

திருச்சி மாவட்டம் உப்பிலியபுரத்தில் தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கி அருகில் வசித்து வருபவர் ஜெய்சரண் (வயது 25). ரஷியாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ். படித்துள்ள இவர் தற்போது சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றி வருகிறார். மேலும் ஆன்லைன் மூலம் பணம் பரிவர்த்தனை வேலைகளையும் பகுதி நேர பணியாக செய்து வந்ததாக கூறப்படுகிறது.

ஆந்திரமாநிலம்கிருஷ்யா மாவட்டம் கங்காவரத்தை சேர்ந்த ரவிகுமார் (55) என்பவர் ரஷியாவில் படித்து வரும் தனது மகளுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதற்காக, ஜெய்சரணை தொடர்பு கொண்டு அவருக்கு ஆன்லைன் மூலம் ரூ.3 லட்சத்து 60 ஆயிரம் பணம் அனுப்பி உள்ளார். ஆனால் ஜெய்சரண் அந்த பணத்தை அனுப்பவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தபணத்தைரவிகுமார் திருப்பி கேட்டபோது கொலை மிரட்டல் விடுத்ததாக தெரிகிறது.



இது குறித்து ரவிகுமார் கொடுத்த புகாரின்பேரில் உப்பிலியபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் ஜெய் சரண் ரஷியாவில் படித்து வரும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இதுபோல் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புவதாக கூறி ரூ.5 கோடியே 90 லட்சம் வரை ஏமாற்றி மோசடி செய்தது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து ஜெய்சரணை கைது செய்த போலீசார்அவரைதுறையூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். பின்னர் அவர் கோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெரு நாட்டை தாக்கிய மணல் புயல் பொதுமக்கள் அவதி

லிமா, ஆக. 3

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பெருவில் கடும் மணல் புயல் தாக்கியது. வளிமண்டலத்தில் உருவான உயர் அழுத்த மண்டலத்தால் ஏற்பட்ட தீவிர காற்று காரணமாக இந்த மணல் புயல் உருவானதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

திடீரென தாக்கிய மணல் புயலால், பெரு நாட்டில் உள்ள இகா, அரிகுவிபா, மோகிகுவா மற்றும் தாக்னா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. சாலைகள் மற்றும்கட்டிடங்கள், மணல் மற்றும் புழுதியால் மூடப்பட்டன. சாலைகளில் புழுதிக்காற்று வீசியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர்.



கடலோரப் பகுதிகளிலும் மணல் புயலின் தாக்கம் உணரப்பட்டது. சுமார் 50 கி.மீ. வேகத்தில் 3 மணி நேரம் வரை பலத்த காற்று வீசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் ஞாயிற்றுக்கிழமை வரை காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறையில் வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியீடு

சென்னை, ஆக. 3

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் கீழ் இயங்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககத்தில் நிலை 1, ரூ.15,70050000 (முந்தைய சம்பள ஏற்ற முறை ரூ.4800ரூ.10,000 + தர ஊதியம் ரூ.1300) எனும் சம்பளத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளருக்கான அனைத்துப் படிகளுடன் கூடிய அலுவலக உதவியாளர் பணியிடம் ஒன்றும்;

நிலை – 15, ரூ.36200 – 114800 (முந்தைய சம்பள ஏற்ற முறை ரூ.930034800 + தர ஊதியம் ரூ.4500) எனும் சம்பளத்திலமைந்த தொகுப்பாளர் பணியிடம் ஒன்றும் நிரப்பப்படவுள்ளன. அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (SCAPriority) எனும் இனச் சுழற்சி முறையிலும், தொகுப்பாளர் பணியிடத்திற்கு 'ஆதிதிராவிடர் முன்னுரிமைப் பெற்றவர்' (Scheduled Caste Priority) எனும் இனச் சுழற்சி முறையிலும் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதிகபட்ச வயது வரம்பு 01.07.2025 அன்றுள்ளபடி 37. தமிழக அரசின் நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி வயது வரம்பு தளர்வு செய்யப்படும்.

அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி (VIII Std. Passed) தொகுப்பாளர் பணியிடத்திற்கான கல்வித் தகுதி தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் (தமிழில் எம்.ஏ.). அதிகபட்ச வயது வரம்பு 01.07.2025 அன்றுள்ளபடி 37. தமிழக அரசின் நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி வயது வரம்பு தளர்வு செய்யப்படும்.

விருப்பமும் தகுதியும் உடையவர்கள் வெள்ளைத் தாளில் கடவுச்சீட்டு அளவிலான ஒளிப்படத்தினை ஒட்டி தன்விவரக் குறிப்புடன் பெயர், முகவரி, பிறந்தநாள், மதம், இனம், கல்வித் தகுதி, முன்னுரிமை கோருவதற்கான சான்று ஆகியவற்றுடன் தேவையான சான்றிதழ்களின் ஒளிப்படிகளைத் தற்சான்றொப்பத்துடன் (Self Attested) இணைத்து 16.08.2025ஆம் நாள் மாலை 5.30 மணிக்குள் நேரிலோ, பதிவு அஞ்சலிலோ, "இயக்குநர் (முகூபொ), செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04429520509 என்னும் தொலைபேசி எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெற்கு ரயில்வேயின் புதிய முதன்மை தலைமை பாதுகாப்பு ஆணையர் பதவியேற்பு

சென்னை, ஆக. 3


தெற்கு ரயில்வேயின் ரெயில்வே பாதுகாப்புப் படையின் முதன்மை தலைமை பாதுகாப்பு ஆணையராகவும், இன்ஸ்பெக்டர் ஜெனரலாகவும், முதன்மை தலைமை பாதுகாப்பு ஆணையராகவும் கே.அருள்ஜோதி இன்று பதவியேற்றுள்ளார். முன்னதாக ஜூலை 31ந்தேதி(நேற்று) ஜி.எம். ஈஸ்வர ராவ் பணி ஓய்வு பெற்றதை தொடர்ந்து, கே.அருள் ஜோதி இன்று பதவியேற்றுள்ளார்.



கடந்த 1995ம் ஆண்டு இந்திய ரெயில்வே பாதுகாப்புப் படை (IRPFS) பிரிவின் அதிகாரியாக பணியில் சேர்ந்த கே.அருள் ஜோதி, வடக்கு எல்லைப்புற ரெயில்வே, ஒருங்கிணைந்த ரெயில் பெட்டி தொழிற்சாலை / சென்னை, கிழக்கு ரெயில்வே, கிழக்கு மத்திய ரெயில்வே மற்றும் பிற மண்டலங்களில் ரெயில்வே பாதுகாப்புப் படையில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

குறிப்பாக, 20192020 கொரோனா காலகட்டத்தில் தெற்கு ரெயில்வேயின் டி.ஐ.ஜி.யாக பணியாற்றிய இவர், 503 ஷ்ராமிக் சிறப்பு ரெயில்கள் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் பணியில் ஆர்.பி.எப். குழுக்களுக்கு தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பூவரசங்குப்பம் செங்கேணி மாரியம்மன் கோவில் தேரோட்டம்



விழுப்புரம் ஆக. 3

விழுப்புரம் அருகே உள்ள பூவரசங்குப்பம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற செங்கேணி மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் ஆடி மாதம் 10 நாட்கள் பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழா கடந்த 24ந் தேதி காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அந்தந்த உபயதாரர்கள் சார்பில் உற்சவம் நடந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வாக, இன்று மாலை தேரோட்டம் நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட தேரில் சிறப்பு மலர் அலங்காரத்தில் செங்கேணி மாரியம்மன் எழுந்தருளியதும், தேர்வடம்பிடிக்கப்பட்டது.

பூவரசங்குப்பம், வடவாம்பலம், பள்ளிப்பட்டு, சிறுவந்தாடு, மோட்சகுளம், சின்னமடம், பரசுரெட்டிப்பாளையம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த பக்தர்கள் தேர் இழுத்து அம்மனை வழிபட்டனர்.

தேர், கோவிலின் 4 மாட வீதிகள் வழியாக சென்று மீண்டும் கோவி லை சென்றடைந்தது. அதன் பிறகு அம்மனுக்கு மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## கள்ளழகர் கோவிலில் ரூ.53 லட்சம் உண்டியல் காணிக்கை

மதுரை, ஆக. 3

கள்ளழகர் கோவில் உண்டியல்கள் அழகர் கோவில் திருக்கல்யாண மண்டப வளாகத்தில் எண்ணப்பட்டன.

இதில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய ரூ.53 லட்சத்து, 54, ஆயிரத்து 409, தங்கம் 32 கிராம், வெள்ளி 250 கிராம், வெளிநாட்டு டாலர் நோட்டுகளும் கிடைக்க பெற்றன.



உண்டியல் திறப்பின் போது துணை ஆணையர் யக்ஞ நாராயணன், உதவி ஆணையர் பிரதீபா, அறங்காவலர்குழு உறுப்பினர்கள் பாண்டியராஜன், செந்தில்குமார், தக்கார் பிரதிநிதி நல்லதம்பி, கண்காணிப்பாளர்கள் பாலமுருகன், அருணாதேவி, மக்கள் தொடர்பு அலுவலர் முருகன் மற்றும் கோவில் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## உடன்குடி: சீர்காட்சி தர்மபதியில் ஆடி திருவிழா கொடியேற்றம் நிகழ்ச்சிகள் முழு விவரம்



தூத்துக்குடி ஆக. 3

உடன்குடி அருகே உள்ள சீர்காட்சி அய்யா நாராயண சுவாமி தர்மபதியில் ஆடி மாதத்தில் திருவிழா விமரிசையாக நடத்தப்படும். அவ்வகையில் இந்த ஆண்டின் திருவிழா தொடங்கியது. 4.30 மணிக்கு பணிவிடையைத் தொடர்ந்து அதிகாலை 5 மணிக்கு திருநாமக் கொடியேற்றம் நடைபெற்றது. அதன்பின்னர் உகப்படிப்பு, அய்யா சப்ரத்தில் பதிவலம் வருதல் நடந்தது. இந்நிகழ்ச்சிகளில் ஏராளமான அன்புக் கொடி மக்கள்கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

இன்று காலை 7 மணிக்கு பக்தர்களுக்கு சிற்றுண்டி தர்மம், மதியம் 12 மணிக்கு பணிவிடை, உச்சி படிப்பு, மதியம் 1.30 மணிக்கு அன்னதர்மம் நடந்தது. மாலை 6 மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, திரு ஏடு வாசிப்பு, இரவு 9 மணிக்கு அன்னதர்மம் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்நாளைமுதல் 6ம் தேதி வரை தினசரி காலை 6 மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, மதியம் 12 மணிக்கு பணிவிடை, உச்சி படிப்பு, மாலை 6 மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, திரு ஏடு வாசித்தல், இரவு 9 மணிக்கு சிற்றுண்டி தர்மம் நடக்கிறது. 7ம் தேதி காலை 6 மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, ஊர் மக்களிடம் தர்மம் எடுக்க செல்லுதல், மதியம் 12 மணிக்கு பணிவிடை, உச்சி படிப்பு, மாலை 6 மணிக்கு பணிவிடை, உகப் படிப்பு, திரு ஏடு வாசித்தல், இரவு 9 மணிக்கு சிற்றுண்டி தர்மம் நடைபெறும்.

8ம் தேதி காலை 6 மணிக்கு பணிவிடை, உகப் படிப்பு, மதியம் 12 மணிக்கு பணிவிடை, உச்சிப்படிப்பு, பகல் 1.30 மணிக்கு உம்பான் அன்னதர்மம், மாலை 5 மணிக்கு அன்பு கொடி மக்கள் திருக்கல்யாண சுருள் மற்றும் இனிப்பு பலகாரங்களை பதிக்கு கொண்டு வருதல், இரவு 7 மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, திருக் கல்யாணதிரு ஏடுவாசிப்பு, இரவு 8 மணிக்கு அன்னதர்மம், இரவு 9 மணிக்கு திரு விளக்கு பணிவிடை, இரவு 9.30 மணிக்கு திருக்கல்யாண விருந்து, இரவு 11 மணிக்கு அய்யா குதிரை வாகனத்தில் பவனி வருதல், இரவு 12 மணிக்கு ஊஞ்சல் தாலாட்டு நடைபெறும். 9ம் தேதி காலை 6 மணிக்கு மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, மதியம் 12 மணிக்கு பணிவிடை, உச்சி படிப்பு, காலை, மதியம், இரவு அன்ன தர்மம், மாலை 6 மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, திரு ஏடு வாசிப்பு, இரவு 10 மணிக்கு அய்யா புஷ்ப வாகனத்தில் பதி பவனியும், சந்தன குடம், மாவிளக்கு பெட்டி எடுத்து வரும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

10ம் தேதி காலை 6 மணி பணிவிடை, உகப்படிப்பு, மதியம் 12 மணிக்கு பணி விடை, உச்சிப் படிப்பு, காலை, மதியம், இரவு அன்னதானம், மாலை6மணிக்கு அன்பு கொடி மக்கள் பதியில் பால் வைத்தல்.

இரவு 10 மணிக்கு பணி விடை, உகப்படிப்பு பட்டாபிஷேகத் திரு ஏடு வாசிப்பு, இரவு 12 மணிக்கு இந்திர வாகனத்தில் நகர்வலம் வருதல், வரும் 11ம் தேதி அதிகாலை 4 மணிக்கு திருநாமக் கொடி அமர்தல், பள்ளியுணர்தல், இனிமம் வழங்குதலுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

## அரசு திட்டங்கள் மக்கள் நலனை மேம்படுத்த தானே தவிர, சுய விளம்பரத்திற்காக அல்ல நயினார் நாகேந்திரன்

சென்னை ஆக. 3

தமிழகபா.ஜ.க.தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, கட்சி விளம்பர பாணியில் "ஸ்டாலின்" பெயரைப் பயன்படுத்தக்கூடாது என்ற தீர்ப்பை வழங்கியதன் மூலம், மக்கள் பணத்தில் தி.மு.க. அரசு செய்யும் வெற்று விளம்பரங்களுக்கு சென்னை ஐகோர்ட்டு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அ.இ.அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்சி.வி. சண்முகம் தொடர்ந்த இவ்வழக்கில் கிடைத்த இந்தத் தீர்ப்பு வரவேற்பிற்குரியது.



மக்களுக்காக மக்கள் வரிப்பணத்தில் வழங்கப்படும் நலத்திட்டங்களில் எல்லாம் "ஸ்டாலின்" என்று தனது பெயரைஸ்டிக்கர் ஒட்டிக்கொள்ளும் முதல்வர் மு.க. ஸ்டாலின், அரசு திட்டங்கள் மக்கள் நலனை மேம்படுத்துவதற்குதானே தவிர, சுய விளம்பரத்திற்காக அல்ல என்பதை இனியாவது உணரவேண்டும். மேலும், சட்டமன்றத் தேர்தல்நெருங்கும்வேளையில், பொதுமக்கள் வரிப்பணத்தில் இயங்கும் திட்டங்களுக்கு "உங்களுடன் ஸ்டாலின்", "நலம் காக்கும் ஸ்டாலின்" என்று விளம்பர அரசியலைமனதில்வைத்து சூட்டிய பெயரை உடனடியாக கோர்ட்டு தீர்ப்பிற்கு இணங்கி நீக்க வேண்டும் என்றுதமிழகஅரசைக்கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு... கல்லூரி மாணவி, காதலன் அடுத்தடுத்து தற்கொலை

புதுக்கோட்டை, ஆக. 3

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நாகுடியை அடுத்த புறங்காடு கிராமத்தை சேர்ந்தவர் முருகன். இவரது மகன் பிரகாஷ் (வயது 17). இவர் தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் உள்ள ஒரு கல்லூரியில் பி.எஸ்சி. முதலாம் ஆண்டு படித்து வந்தார். நெமெலிக்காடு கிராமத்தை சேர்ந்தவர் பழனிவேல் மகள் அபிநயா (17). இவர் புதுக்கோட்டையில் உள்ள அரசு கல்லூரியில் பி.எஸ்சி. முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

இவர்கள் 2 பேரும் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை திருவப்பாடி அருகே உள்ள அத்தாணி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஒன்றாக படித்து வந்தனர். அப்போது அவர்களுக்குள் காதல் ஏற்பட்டது. இவர்களது காதல் விவகாரம் பெற்றோர்களுக்கு தெரிய வரவே அவர்கள் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்ததாக கூறப்படுகிறது.

ஆனால் கல்லூரியில் சேர்ந்த பிறகும் அவர்களது காதல் தொடர்ந்தது. இதனை அபிநயாவின் பெற்றோர் மீண்டும் கண்டித்தனர். இதனால் மனமுடைந்த அபிநயா கடந்த 28ந் தேதி வீட்டில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்தை (விஷம்) எடுத்து குடித்துள்ளார். வீட்டில் இருந்தவர்கள் அவரை மீட்டு அறந்தாங்கியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த அபிநயா சிகிச்சை பலனின்றி அன்று இரவே பரிதாபமாக உயிரிழந்தார். இதையறிந்த பிரகாஷ் மனமுடைந்த நிலையில் இருந்து வந்தார். இந்நிலையில் பிரகாஷ் வீட்டில் இருந்த உத்திரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து நாகுடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். காதல் ஜோடி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## தஞ்சையில் ஓட்டுநர், நடத்துனர் மீது சரமாரி தாக்குதல் பரபரப்பு காட்சிகள்

தஞ்சை, ஆக. 3

தஞ்சை புதிய பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து ஒட்டுநர் மற்றும் நடத்துனரை மற்றொரு தனியார் பேருந்து ஓட்டுநர் சரமாரியாக தாக்கும் சிசிடிவி காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கும்பகோணத்தில் இருந்து போட்டிப்போட்டுக் கொண்டு தஞ்சை புதிய பேருந்து நிலையத்திற்கு வந்த போது நேரப்பிரச்சினை தொடர்பாக இரு தரப்பினருக்கும்



இடையே மோதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இந்த மோதல் காரணமாக அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.

இந்த மோதல் குறித்த வீடியோ தற்போது இணையத்தில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## காதல் மனைவியை கொன்றது ஏன்? கைதான மினி பஸ் டிரைவர் பரபரப்பு வாக்குமூலம்

நெல்லை, ஆக. 3

நெல்லை மாவட்டம் திசையன்விளையைச்சேர்ந்தவர் முத்துக்குமார் (வயது 37) மினிபஸ் டிரைவர். இவருக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தை உள்ள நிலையில், கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு ரத்தினமணியன்குடியை சேர்ந்த ஜாய்ஸ் (30) என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர்.

கடந்த சில மாதங்களாக காதல் தம்பதி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இந்தநிலையில், கடந்த 29ந்தேதி அதிகாலையில் திடீரென ஜாய்ஸ் தலையில் காயத்துடன் மயக்கமான நிலையில் 108 ஆம்புலன்ஸ் திருச்செந்தூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து தகவல் அறிந்த போலீசார் விரைந்து சென்று அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.




இந்த நிலையில் ஜாய்ஸ் சாவு குறித்து முத்துக்குமாரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தினர். முதலில் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாக நாடகமாடிய அவர் முன்னுக்குப்பின் முரணாக பேசியுள்ளார். அவரிடம் போலீசார் நடத்திய தீவிரவிசாரணையில் மனைவியை அவர் அடித்து கொன்றதாக ஒப்புக்கொண்டார்.

அப்போது அவர் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில், காதல் திருமணம் செய்த எங்களது வாழ்க்கை சந்தோசமாக சென்று கொண்டிருந்தது. கடந்த சில மாதங்களாக அவளது நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டது. இதுகுறித்து அவளிடம் நான் கேட்டதால், இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு வந்தது. சம்பத்தன்றும், அவளது நடத்தை குறித்து நான் கேட்டதால் ஏற்பட்ட தகராறு முற்றியதில், பூரி கட்டையால் தலையில் தாக்கினேன். அவளுக்கு தலையில் காயம் ஏற்பட்டு கீழே விழுந்தாள். அவள் மயக்கம் தெளியாமல் இருந்ததால் பயந்து போன நான், பின்னர் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி வரவழைத்தேன். அந்த ஆம்பலன்சில் மனைவியை ஏற்றி கொண்டு திருச்செந்தூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தேன். அங்கு அவளை பரிசோதித்த டாக்டர், ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார். இதை தொடர்ந்து கொலையை மறைக்க முயற்சித்தேன். போலீசாரின் தீவிர விசாரணையில் சிக்கி கொண்டேன், என தெரிவித்தார். இதையடுத்துமுத்துக்குமார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில்அடைக்கப்பட்டார்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
3.8.2025

# குடும்பத் தகராறில் கணவன் கன்னத்தில் அறைந்ததால் மயங்கி விழுந்து பெண் உயிரிழப்பு

சென்னை ஆக. 3

சென்னை அரும்பாக்கம், ஜெய்நகர், 3வது தெருவைச் சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் (49 வயது). டீ கடையில் வேலை செய்து வந்தார். இவரது மனைவி அருள்மணி (45 வயது). இவர், அதே பகுதியில் உள்ள பெண்கள் விடுதியில் வார்டனாக வேலை செய்து வந்தார். இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர்.

அருள்மணி வார்டனாக வேலைசெய்யும்அதேவிடுதியில் குடும்பத்துடன் வசித்து வந்தனர். ராதாகிருஷ்ணனுக்கு குடிப்பழக்கம் இருந்துள்ளது.தினமும்குடித்துவிட்டு வந்து மனைவியுடன் தகராறு செய்து வந்துள்ளார்.



இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவும் வழக்கம் போல் அவர் குடித்து விட்டு விடுதியில் உள்ள தங்களது அறைக்கு வந்துள்ளார். இதனால் கணவன், மனைவி இடையே தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த ராதாகிருஷ்ணன், மனைவியின் கன்னத்தில் 'பளார்' என அறைந்தார். இதனால் அருள்மணி மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள், அருள்மணி ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த கோயம்பேடு போலீசார் அருள்மணி உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இதுபற்றி கொலை ஆகாத மரணம் என்ற பிரிவில் வழக்குப்பதிவு செய்த போலீசார், ராதாகிருஷ்ணனை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஓ.பன்னீர்செல்வத்தை சமாதானப்படுத்த பாஜக முயற்சி



சென்னை, ஆக 3

முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட பிறகு, 'அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழு' என்ற அமைப்பை உருவாக்கி, தனது ஆதரவாளர்களுடன் செயல்பட்டு வருகிறார். இந்த சூழலில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னை வந்த மத்திய மந்திரி அமித்ஷா, அதிமுகவுடன் கூட்டணியை உறுதி செய்தார்.

இந்த கூட்டணி வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் இணைந்து போட்டியிட உள்ளது. அதே நேரம் தாங்கள் தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிப்பதாக ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்து வந்தார். இதற்கிடையே கடந்த 26, 27 ஆகிய தேதிகளில் தமிழகம் வந்த பிரதமர் மோடியை, நேரில் சந்திக்க ஓ.பன்னீர்செல்வம் அனுமதி கேட்டிருந்தார். ஆனால், அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் ஓ.பன்னீர்செல்வம் அதிருப்தி அடைந்தார்.

இந்த நிலையில் நேற்று தனது ஆதரவாளர்களுடன் ஓ.பன்னீர்செல்வம் ஆலோசனை நடத்தினார். அப்போது, 'நம்மை மதிக்காத பாஜக கூட்டணியில் இனியும் இருக்கக்கூடாது' என்று நிர்வாகிகள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் அறிவித்தார். இதையடுத்து பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக அறிவித்த ஓ.பன்னீர்செல்வம், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று 2 முறை சந்தித்து பேசினார்.

இது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கூட்டணியில் இருந்து வெளியேறிய முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை சமாதானப்படுத்தும் முயற்சியில் பாஜகவினர் ஈடுபட்டுள்ளனர். வரும் 26ம் தேதி மீண்டும் தமிழகம் வரும் பிரதமர் மோடியை சந்திக்க வைப்பதாக பாஜக நிர்வாகிகள் ஓ.பன்னீர்செல்வத்துக்கு உறுதி அளித்ததாக கூறப்படுகிறது. இருப்பினும் பாஜக நிர்வாகிகளின் வாக்குறுதியை ஓ.பன்னீர்செல்வம் ஏற்க மறுத்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தூத்துக்குடி: விவசாயிகள் வாழைப் பயிருக்கு காப்பீடு செய்து பயன் பெறலாம் கலெக்டர் தகவல்



தூத்துக்குடி ஆக. 3

தூத்துக்குடிமாவட்டகலெக்டர்இளம்பகவத்வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நடப்பாண்டில் (2025-2026) பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தை தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படுத்திட KSHEMA காப்பீட்டு நிறுவனம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளுக்கு நிதியுதவி வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்கள் கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வாழைப்பயிருக்கு செப்டம்பர் மாதம் 16ம் தேதி (16.9.2025) காப்பீடு செய்ய கடைசி நாளாக அரசினால் காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட தேதிக்குள் இத்திட்டத்தில் விவசாயிகள் இணைந்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாழை பயிருக்கு பயிர்காப்பீடு செய்ய பிரிமீயம் தொகை ஏக்கருக்கு ரூ.4,480 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தகுதியான விவசாயிகளுக்கு மகசூல் இழப்பீட்டின் அடிப்படையில் காப்பீட்டு இழப்பீடு தொகை சம்பந்தப்பட்ட நிறுவனம் மூலம் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இத்திட்டத்தில் பதிவு செய்யும் போது விவசாயியின் பெயர், வங்கிக் கணக்கு எண், சாகுபடி செய்த கிராமத்தின் பெயர், சாகுபடி செய்த பயிரின்பரப்பு, புல எண், முழு முகவரி ஆகிய விபரங்களை சரிபார்த்த பின்பு பொது இ சேவை மையங்களில் பதிவேற்றம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வங்கி கணக்கு புத்தகத்தில் உள்ள பெயருக்கும், ஆதார் அட்டையில் உள்ள பெயருக்கும் இடையே வேறுபாடு காணப்படின் ஆதார் அட்டையில் உரிய திருத்தங்கள்மேற்கொண்டபின்இணையத்தில்பதிவேற்றம் செய்தல் வேண்டும். மாவட்ட கண்காணிப்பு குழு அறிவுறுத்தலின்படி, பொது இ சேவை மையங்களில் பயிர் காப்பீடு செய்ய வரும் விவசாயிகள் அடங்கல்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற முத்திரையிடுதலினை பொது இ சேவை மையங்கள் கடைபிடிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதன் மூலம் ஏற்கெனவே காப்பீடு செய்யப்பட்ட அடங்கல் பதிவுகள் மீண்டும் பதிவேற்றம் செய்யப்படாத வகையில் பாதுகாக்கப்பட்டு பயனாளிக்கு இழப்பீடுத் தொகைவிரைந்துகிடைக்கபொதுஇசேவைமையங்களும் பங்களிப்பு நல்கி இத்திட்டத்தினை பயனுள்ள வகையில் பயனாளிகள் பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் (3.8.2025)

மேஷம்: திர்பார்த்தவேலைகள்சாதகமாக முடியும். நண்பர்கள் ஆதரவு தருவார்கள். பண வரவு சிறப்பாக இருக்கும்.

ரிஷபம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். வாகனத்தை கவனமாக இயக்கவும். திட்டமிட்ட வேலைகள் வெற்றிகரமாகும்.

மிதுனம்: அலுவலகத்தில் பாராட்டுகள் கிடைக்கும். புதிய சந்திப்புகள் உண்டாகும். பண ரீதியாக முன்னேற்றம்.

கடகம்: குடும்பச் செலவுகள் அதிகரிக்கலாம்.உடல்நலத்தில் கவனம் தேவை. சின்னசிறு மனக்கசப்புகள் ஏற்படலாம்.

சிம்மம்: தொழில் வளர்ச்சி காணும் நாள். வழக்குகள் சாதகமாக முடியும். சுப நிகழ்வுகள் திட்டமிடப்படும்.

கன்னி: மன உளைச்சல் குறையும். குடும்பத்தில் உற்சாகம். புதிய முயற்சிகள் வெற்றி பெறும்.

துலாம்: எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம். வாகன யோகம்.

விருச்சிகம்: பண விஷயத்தில் கவனம் தேவை. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். மனஅழுத்தம் குறைக்கும் செயல்களில் ஈடுபடவும்.

தனுசு: புதிய திட்டங்கள் நடைமுறைப்படும். உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். எதிரிகள் தொல்லையில்லா நாள்.

மகரம்: மிதமானநிதிநிலை.குடும்பத்தில் மகிழ்ச்சி. தொழிலில் போட்டி அதிகரிக்கலாம்.

கும்பம்: மிதமானநிதிநிலை.குடும்பத்தில் மகிழ்ச்சி. தொழிலில் போட்டி அதிகரிக்கலாம்.

மீனம்: சுப நிமிடங்கள் அமையும். புதிய முயற்சியில் வெற்றி. தொழிலில் வளர்ச்சி.

# ஹோலி ஏஞ்சல்ஸ் பப்ளிக் பள்ளியின் விளையாட்டு விழா

சேலம், ஆக. 3

சேலம் ஹோலி ஏஞ்சல்ஸ் பப்ளிக் பள்ளியின் ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது விழாவிற்கு முதன்மை விருந்தினராக சேலம் மாநகரம் அம்மாபேட்டை சரக காவல் துணை ஆணையாளர் தேன்மொழி வேல் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக சேலம் விநாயகா மிஷன் உடற் கல்வி இயல் கல்லூரியின் முதல்வர் டாக்டர் சரவணன் மரியாளின் பிரான்சிஸ் கண் ஊழியர் சபையின் பெங்களூர் மறை மாநில தலைவி அருட் சகோதரி ஏஞ்சலா ஆகியோர் கலந்து கொண்டனர் மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை சிறப்பு விருந்தினர்கள் ஏற்றுக்கொண்ட பின் சிறப்பு விருந்தினர்களும் பள்ளி தாளாளர் அருள் சகோதரி சுஜிதா முதல்வர் அருள் சகோதரி ஜான்சி அகஸ்தியன் ஆகியோரும் புறாக்களையும் வண்ண பலூன்களையும் பறக்கவிட்டு விழாவை தொடங்கி வைத்தனர்

மேலும் மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன மாணவிகளின் பல்வேறு வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் காண்பூர் வியக்கும் வண்ணம் நடைபெற்றது விழாவில் கலந்து கொண்ட மாணவிகளின் பெற்றோர்களுக்காகவும் முன்னாள் மாணவர் மாணவிகளுக்காகவும் விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றன

இறுதியில் போட்டியில் வென்ற வீராங்கனைகளுக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கி பாராட்டி விழா உரையாற்றினர் விழாவில் பெற்றோர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர் விழா ஏற்பாடுகளை தாளாளர் அருள் சகோதரி சுஜிதா மற்றும் முதல்வர் அருள் சகோதரி ஜான்சி அகஸ்தியன் ஆகியோர் செய்து இருந்தனர்

# சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருது நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் நெகிழ்ச்சி



இந்தியாவின் 71ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதில், 2023ம் ஆண்டுக்கான சிறந்த தமிழ் படத்துக்கான தேசிய விருதுக்கு பார்கிங் திரைப்படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள தேசிய ஊடக மையத்தில் இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டன. இந்த தேர்வுக்கான போட்டியில் 332 படங்கள் இடம்பெற்றன.

இந்த சூழலில் சிறந்த தமிழ் படம், சிறந்த திரைக்கதை, சிறந்த துணை நடிகர் ஆகிய 3 பிரிவுகளில் பார்க்கிங் திரைப்படம் விருதுகளை வென்றுள்ளது.

'பார்க்கிங்' படத்தில் நடித்ததின் மூலம் சிறந்த குணச்சித்திர நடிகருக்கான தேசிய விருதை பெற்றுள்ள எம்.எஸ்.பாஸ்கர் கூறியதாவது:

இது கூட்டு முயற்சிக்கு கிடைத்த பரிசு என்பேன். ஏனெனில் நான் நடித்ததில் என்னை ஈர்த்த படங்களில் 'பார்க்கிங்' மிகவும் முக்கியமான படம். ஒரு சாதாரண சண்டை எந்தளவு செல்லும் என்பது அப்படத்தில் காட்டப்பட்டிருந்தது.

எதிர்மறை கதாபாத்திரத்தில் நடித்திருந்தாலும் என் நடிப்புக்கு ரசிகர்கள் பெரும் வரவேற்பை தந்தனர். இப்போது தேசிய விருதும் கிடைத்திருக்கிறது.

விருதால் மகிழ்ந்து போயுள்ளேன். நெஞ்சம் நெகிழ்ந்தும் போயிருக்கிறேன். இதை என் வாழ்நாளில் முக்கியமான நாளாக கருதுவேன். இந்த விருது எனக்கு கிடைக்க காரணமாக இருந்த பார்க்கிங் படக்குழுவுக்கும், ரசிகர்களுக்கும், என் பயணத்தில் துணை நின்ற அத்தனை பேருக்கும், குடும்பத்தினருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# நாளை வெளியாகும் ரஜினியின் 'கூலி' டிரெய்லர்




நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில்உருவாகிஇருக்கும்திரைப்படம்'கூலி'.இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தில் அமீர் கான், சத்யராஜ், நாகர்ஜுனா, சௌபின் ஷாஹிர், சுருதிஹாசன், பகத் பாசில், ரெபா மோனிகா ஜான் மற்றும் உபேந்திரா ஆகியோர் நடித்துள்ளனர். இப்படத்தின் மீது மிகப்பெரிய எதிர்ப்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவி வருகிறது. இத்திரைப்படம் வரும் ஆகஸ்ட் 14ம் தேதி வெளியாகிறது.

'கூலி' படத்தில் இடம் பெற்றுள்ள சிக்கிடு, மோனிகா மற்றும் பவர் ஹவுஸ் பாடல்கள் வெளியாகி மக்களால் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. படத்தின் புரோமோஷன் பணிகள் தீவரமாக நடைபெற்று வருகின்றன.

ரஜினி நடிக்கும் 'கூலி' படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டுவிழா நாளை மாலை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற உள்ளது. படத்தின் இசை வெளியீட்டு விழா தொடர்பான வீடியோவை படக்குழு வெளியிட்டது. படத்திற்கு தணிக்கை குழு 'ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது

இந்நிலையில் ரஜினிகாந்த் நடித்துள்ள 'கூலி' படத்தின் டிரெய்லர் நாளை மாலை 7 மணிக்கு வெளியாகுமென சன் பிக்சர்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

# வாத்தி படத்திற்கு என்னை தேர்ந்தெடுத்த தனுஷுக்கு நன்றி ஜி.வி.பிரகாஷ்



2023ம் ஆண்டில் வெளியான திரைப்படங்களுக்கான தேசிய விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டது. இவற்றில் வாத்தி திரைப்படத்திற்கு சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதை வென்றுள்ளார் ஜி.வி.பிரகாஷ் குமார்.

2வது முறையாக தேசிய விருது பெறும் ஜி.வி.பிரகாஷ், தனக்கு கிடைத்த விருதுக்காக நன்றி. ரொம்ப சந்தோஷமாக உள்ளது. நான் எதிர்பாக்கவே இல்ல.. சர்ப்ரைஸ் ஆகிட்டேன் என்று கூறியுள்ளார்.


இது குறித்து அவர் எக்ஸ் தள பதிவில்,

இரண்டாவது முறையாக ஆசிர்வதிக்கப்பட்டுள்ளேன். சிறந்த இசையமைப்பாளருக்கான விருதைப் பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தேசிய விருது பயணத்துக்காக வாத்தி படக்குழுவினருக்கு எனது நன்றி.

வாத்தி படத்துக்காக என்னைத் தேர்ந்தெடுத்த சகோதரர் தனுஷுக்கு எனது மனமார்ந்த நன்றி. பொல்லாதவன் முதல் அசுரன், வாத்தி, இட்லி கடை வரையில் எங்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு, எங்கள் இருவருக்கும் ஆக்கப்பூர்வமாக பலனளித்து வருகிறது.என்னுடைய சிறந்த படைப்பை வழங்க, என்னை ஊக்கப்படுத்திய மற்றும் என்னை நம்பிய இயக்குநர் வெங்கி அட்லூரிக்கு ஒரு பெரிய நன்றி.என் மீது நம்பிக்கை வைத்த தயாரிப்பாளர்கள் நாகவம்சி, திரிவிக்ரமுக்கு நன்றி.

எனது குடும்பத்தினர், இசைக் கலைஞர்கள், பாடலாசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், அன்பு நண்பர்கள், என்னைஆதரித்துநம்பிய எனது ரசிகர்கள் அனைவருக்கும் மிகவும் நன்றி என்று குறிப்பிட்டத்துடன், பிரபஞ்சத்துக்கும் நன்றி அதில் பதிவிட்டுள்ளார்.

# மக்காவ் ஓபன் பேட்மிண்டன்: லக்சயா சென் அரையிறுதிக்கு முன்னேற்றம்



மக்காவ் ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி மக்காவ் நகரில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய இளம் வீரர் லக்சயா சென் 21-14, 18-21, 21-14 என்ற செட் கணக்கில் சீனாவின் சூயான் சென் சூவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு இந்திய வீரர் தருண் 21-12, 13-21, 21-18 என்ற செட் கணக்கில் சீனாவின் ஹூ ஜீயை சாய்த்து அரையிறுதிக்குள் நுழைந்தார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவின் காலிறுதியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டிசிராக் ஷெட்டி இணை 14-21, 21-13, 20-22 என்ற செட் கணக்கில் மலேசியாவின் சோங் ஹோான் ஜியான்ஹாய்கால் முகமது ஜோடியிடம் தோற்று வெளியேறியது.

# இந்திய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக காலித் ஜமில் நியமனம்



இந்திய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக ஒரு ஆண்டாக இருந்து வந்த மனோலா மார்கஸ் (ஸ்பெயின்) கடந்த மாதம் முதல் வாரத்தில் தனது பதவியில் இருந்து விலகினார். ஆசிய கோப்பை தகுதி சுற்றில் தரவரிசையில் பின்தங்கிய ஹாங்காங்க்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி (01) தோல்வியை சந்தித்த பிறகு எழுந்த கடும் விமர்சனங்களை தொடர்ந்து அகில இந்திய கால்பந்து சம்மேளனத்துடன் சுமூகமாக பேசி விலகினார். அவரது வழிகாட்டுதலில் இந்திய அணி 8 ஆட்டங்களில் ஆடி ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. 4 ஆட்டங்களில் டிராவும், 3 ஆட்டங்களில் தோல்வியும் சந்தித்தது.

இதைத் தொடர்ந்து இந்திய கால்பந்து அணியின் புதிய தலைமை பயிற்சியாளரை அடையாளம் காணுவதற்கான தேடுதல் வேட்டையை அகில இந்திய கால்பந்து சம்மேளனம் சமீபத்தில் தொடங்கியது. இந்த பதவிக்கு வெளிநாட்டினர் உள்பட மொத்தம் 170 பேர் விண்ணப்பித்து இருந்தனர்.

இந்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்த முன்னாள் வீரர் ஐ.எம்.விஜயன் தலைமையிலான டெக்னிக்கல் கமிட்டி அதில் இருந்து காலித் ஜமில் (இந்தியா), முன்னாள் பயிற்சியாளரான ஸ்டீபன் கான்ஸ்டன்டைன் (இங்கிலாந்து), ஸ்டீபன் தர்கோவிச் (சுலோவக்கியா) ஆகிய 3 பேரின் பெயர்களை இறுதி செய்து அகில இந்திய கால்பந்து சம்மேளனத்துக்கு பரிந்துரை செய்தது.

இந்த நிலையில் அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் செயற்குழு முடிவின் படி, இந்திய சீனியர் கால்பந்து அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக காலித் ஜமில் நேற்று அறிவிக்கப்பட்டார். கடந்த 13 ஆண்டுகளில் இந்திய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக இந்தியர் ஒருவர் நியமிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும். இதற்கு முன்பு 2012ம் ஆண்டில் இந்தியாவை சேர்ந்த சவியோ மெடீரா தலைமை பயிற்சியாளராக பதவி வகித்தார்.

48 வயது முன்னாள் வீரரான காலித் ஜமில் இந்திய அணிக்காக 40 சர்வதேச போட்டிகளில் விளையாடி இருக்கிறார். அவர் உள்ளூர் போட்டிகளில் ஈஸ்ட் பெங்கால், மோகன் பகான், நார்த் ஈஸ்ட் யுனைடெட், ஜாம்ஷெட்பூர் உள்பட பல்வேறு முன்னணி அணிகளுக்கு பயிற்சியாளராக பணியாற்றி இருக்கிறார்.

நேஷன்ஸ் கோப்பைபோட்டியில் இருந்து...

மத்திய ஆசிய கால்பந்து சங்கம் சார்பில் நேஷன்ஸ் கோப்பை சர்வதேச கால்பந்து போட்டி தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தானில் வருகிற 29ந் தேதி முதல் செப்டம்பர் 8ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டியில் இருந்து காலித் ஜமில் தனது தலைமை பயிற்சியாளர் பணியை தொடங்குகிறார்.

# பாகிஸ்தான் உள்பட 3 நாடுகள் பங்கேற்கும் டி20 கிரிக்கெட் தொடர்: சார்ஜாவில் நடக்கிறது



நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உள்பட 8 அணிகள் பங்கேற்கும் ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (செப்டம்பர்) 9ந் தேதி முதல் 28ந் தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது.

இந்த போட்டிக்கு சிறந்த முறையில் தயாராகும் பொருட்டு பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் கலந்து கொள்ளும் டி20 கிரிக்கெட் தொடருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமீரகத்தில் உள்ள சார்ஜாவில் வருகிற 29ந் தேதி முதல் செப். 7ந்தேதி வரைநடக்கும் இந்த போட்டியில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் டாப்2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.